IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO. 77/2021

Deposition of Witness : PW-2

Name : ஏகநாதன்

Father's Name /W/o : த/பெ. ஆறுமுகம்

Religion : இந்து

Caste : -

Calling : -

Address : சாலை தெரு, களத்தூர், நெமிலி வட்டம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day 12.02.2024

குறுக்கு விசாரணை:

1. எனக்கு உடல் வலிமையில்லை என்பதால் என் மகனை முதல் வாதியாகவும் நான் 2ம் வாதியாகவும் வழக்காட அனுமதி கேட்டு சொல்லியுள்ள விவரங்கள் சரியானதா என்றால் ஆம். வழக்கு தாக்கல் செய்தபோது உடல்நிலை எப்படி இருந்ததோ அப்படி தான் இப்போதும் உள்ளேனா அல்லது உடல் வலிமையாக உள்ளேனா என்றால் அவ்வாறே தான் உள்ளேன். நான் அறிவுறுத்தலின் பெயரில் தான் என் மகன் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் ஆம். 1955 - 1957 ல் எனக்கு வயது 5-7 இருக்கும் என்றால் ஆம். அந்த காலகட்டத்தில் என்ன நடந்தது என்று எனக்கு சொல்ல முடியாது என்றால் சரிதான். அப்போது என்ன நடந்தது என்று தெரியாது. என் தாத்தா, என் அப்பா, சித்தப்பா, அத்தை ஆகியோரை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அப்போது அனைவரும் ஒன்றாக இருந்தார்கள் என்றால் இல்லை. யாரெல்லாம் 1957 ல் ஒன்றாக இருந்தார்கள் என்றால் நான், என் அம்மா பாஞ்சாலை, என் மாமா முனுசாமி ஆகியோர் ஒன்றாக இருந்தோம். அப்போது கூட்டுக்குடும்பமாக

இருந்தோமா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் கூட்டுக்குடும்பமாக இல்லை.

2. என் அப்பா எப்போது இறந்தார் என்றால் எனக்கு அப்போது 9 வயது. சர்வே எண்.105/1 ன் மொத்த விஸ்திரனம் 2 ஏக்கர் 11 செண்ட் என்றால் ஆம். அந்த கிழக்கு மேற்கு தலையாக 1.5 1/2 ஏக்கர் ஒரு பக்கமும் 1.5 1/2 ஏக்கர் மறுபக்கமும் உள்ளது என்றால் இல்லை. சொத்து ஒரே தலையாக உள்ளதா என்றால் 4, 5 துண்டாக உள்ளது. கீழாண்டை எவ்வளவு உள்ளது மேலாண்டை எவ்வளவு உள்ளது என்றால் ஒன்றாக தான் உள்ளது. முதல் பத்திரத்தில் வாங்கிய 86 செண்டிற்கு அடமானம் போட்டேனா என்றால் ஆம். அடமானம் 1982 ல் போட்ட போது செல்லப்ப குள்ளன் நிலத்திற்கு மேற்கு, பாலாறிக்கு வடக்கு, ஆற்று கால்வாய்க்கு கிழக்கு தெற்கு என்று எல்லைக்கள் பி.சா.ஆ.1ல் குறிப்பிடபட்டுள்ளது என்றால் ஆம். இந்த செக்குபந்தியில் ஒரு ஏக்கர் 25 செண்ட் உரிய சொத்தை செக்குபந்தியாக காட்டவில்லை என்றால் பத்திரம் என்னிடம் இல்லை என்பதால் காட்டவில்லை. பத்திரம் திருடு போய்விட்டது. பத்திரம் திருடு போன விவரம் 1982 யிலேயே தெரியும் என்றால் ஆம். பத்திரம் திருடு போனதற்கு 1982 ல் புகார் ஏதாவது கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. எனக்கு படிக்க தெரியுமா என்றால் படிக்க தெரியும். பி.சா.ஆ.3 பத்திரத்தில் ஏழுமலை பெயரில் பத்திரம்வாங்கப்பட்டு உள்ளது என்றால் எனக்கு கண்பார்வை சரியயில்லாததால் எழுத்து தெரியவில்லை. சாட்சி தற்போது ஏழுமலை பெயரில் பத்திரம் தவறுதலாக வாங்கிவிட்டார். ஏழுமலை பெயரில் தவறுதலாக பத்திரம் எழுதிய விவரம் எனக்கு எப்போது தெரியுமா என்றால் தற்போது தாங்கள் சொல்லிதான் தெரியும்.

3. பிரதிவாதிகள் போட்டுள்ள பதிலில் வாய்மொழியாக 1.5 1/2 செண்டியும் 1.5 1/2 செண்டாக பிரித்துக்கொண்டதாக சொல்லியுள்ளதற்கு மறுப்பு தெரிவித்து என் பிரமாணவாக்குமூலத்தில் ஏதாவது சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பிரித்துக்கொள்ளவில்லை. 1957 ல் நடந்தது தெரியாது என்று சொல்லியுள்ளது

சரிதானா என்றால் என் அம்மா சொல்லி தெரியும். பாகப்பிரிவினை நடக்கவில்லை என்று அம்மா சொல்லி தெரியுமா என்றால் பாகப்பிரிவினை நடந்திருந்தால் என் அம்மா சொல்லியிருப்பார். என் அம்மா எப்போது சொல்லியிருந்தார் என்றால் நடந்திருந்தால் என் அம்மாவும் மாமாவும் சொல்லியிருப்பார். இந்த விவரங்களை என் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 2000 ல் தாவா சொத்தில் போர் போட்டபோது நான் ஆட்சேபனை தெரிவித்தேனா என்றால் அவர்கள் போர் போட்டார்கள் நான் தான் பணம் கொடுத்தேன். நான் தாவாவிலும் பிரமாணவாக்குமூலத்திலும் நான் தான் போர் போட பணம் கொடுத்தேன் என்ற விவரம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

4. செங்கல் சூளை போட்டார்கள், பயிர் வைத்தார்கள், வீடு கட்டினார்கள் நான் அதை ஆட்சேபனை தெரிவித்தேனா என்றால் இன்றைய தேதி வரை நிலம் என் கையில் தான் உள்ளது. 10.11.2021 ல் வா.சா.ஆ.5 அறிவிப்பு கொடுத்தபோது தாவா சொத்தை ஒரு வாரத்தில் சொத்தை என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுள்ளேன் என்றாலும் 7 நாளில் என்னிடம் சொத்தை ஒப்படைக்கவில்லை என்றால் ஒப்படைக்கவில்லை. சொத்தை ஒப்படைக்கசொல்லி வழக்கு போட்டேனா என்றால் வழக்கு போட்டுள்ளேன். சொத்தை ஒப்படைக்கதான் வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரிதான். சாட்சி தற்போது ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். கூட்டுக்குடும்பமாக இருந்தபோது 2 ஏக்கர் 11 செண்ட் இரண்டு பத்திரமாக வாங்கப்பட்டது என்றால் என் அப்பா வாங்கியது. 2 வது சொத்து 1 ஏக்கர் 25 செண்டிற்குரிய கிரைய பத்திரமும் ஏழுமலை பெயரில்தான் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தாத்தாவிற்கு 5 மகள்களில் 3 மகள்கள் இறந்துவிட்டனர் என்றாலும் மீதம் 2 மகள்கள் 1950 க்கு முன்பே திருமணம் செய்துக்கொடுத்துவிட்டனர் என்றாலும் என் சித்தப்பா ஏழுமலை மற்றும் அப்பா ஆறுமுகமும் என் தந்தையுடன் கூட்டுக்குடும்பமாக இருந்தார்கள் என்றாலும் என் தாத்தா இறந்தபிறகு என்

சித்தப்பாவும் என் அப்பாவும் ஒன்றாக இருந்தார்கள் என்றாலும் தை பொங்கல் 1957 ல் ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டில் வாச்சாவாக ஆளுக்கு 1 ஏக்கர் 5 1/2 செண்ட் பிரித்துக்கொண்டார்கள் என்றால் இல்லை.

5. என் தந்தைக்கு மேலாண்டையும் என் சித்தப்பாவிற்கு கீழாண்டையும் பாகம் பிரித்து அனுபவித்து வந்தார்கள் என்றால் இல்லை. நான் குழந்தையாக இருந்ததால் இந்த விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் அதுபோல் இருந்திருந்தால் எனக்கு 9 வயது என்பதால் என் அப்பா, மாமா, அம்மா ஆகியோர் சொல்லியிருப்பார்கள். உண்மையில் கீழாண்டை சொத்து எங்களுக்கு இருந்திருந்தால் பி.சா.ஆ.1 ல் அதை செக்குபந்தியாக காட்டியிருப்போம் என்றாலும் அந்த சொத்து இல்லாததால் தான் சொத்தை காட்டவில்லை என்றால் பத்திரம் இல்லாததால் காட்டவில்லை. இன்றைய தேதி வரை பதிலில் உள்ள விவரம் தெரியாமல் தான் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் எனக்கு அனைத்து விவரமும் தெரியும். பதிலில் 1956 பத்திரம் தங்களிடம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தற்போதுதான் தெரியும். பதிலில் உள்ள விவரங்களை படித்துப்பார்த்தேனா என்றால் ஞாபகம் வரவில்லை. மனவலிமை இல்லை என்பதாலும் உடல்நிலை சரியில்லாததாலும் சரியான விவரங்கள் நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தந்தை அனுபவதிற்கு பிறகு இன்றைய தேதி வரை பிரதிவாதிகள் அனுபவித்தில் உள்ளது என்றாலும் பொய்யாக நான் விவசாயம் செய்வதற்கு அனுமதி கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் மகன் வாக்குமூலத்தை சரிசெய்யதான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. நான் நேரடி வாரிசு என்பதால் சாட்சியம் அளிக்கிறேன். நான் தான் ஆறுமுகம் வாரிசு என்றாலும் ஆனால் சொத்தடைந்த வாரிசு இல்லை என்றாலும் மேலாண்டை பாகம் தான் என் தந்தையுடையது என்றால் சரியல்ல. ஒரே சொத்து தான். என் தந்தை தலையாரியாக இருந்ததால் நானும் அதையே

வேலையில் இருப்பதால் பட்டா என் பெயரில் பெற்றுக்கொண்டேன் என்றால் இல்லை. பட்டாவை மாற்றிக்கொடுக்கிறேன் என்று நான் நேரடியாக சென்று சொல்லிவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக அவர்கள் மீது குற்றவியல் வழக்கும் புகாரும் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மகன் வாக்குமூலம் தெரிந்து அதில் தப்பிப்பதற்காக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.